**Spl.SC.No. 14/2023** Dated:. 02.03.2026

( எதிரி ஆஜர். )

**அ.சா.5 கவிதா க/பெ. குருநாதன்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வழக்கின் புகார்தாரரான கர்ணன் (அ.சா.1) என் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். அ.சா.6 பிச்சைப்பாண்டி என் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். எங்கள் குடியிருப்பு மாரந்தை கிராமத்திற்கு கிழக்கே சுமார் 300 மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் குடியிருப்பு பகுதியில் இருந்து எதிரியின் வீட்டு முன்பு என்ன நடக்கிறது என்பதை பார்க்க முடியாது என்றால் சரிதான். எதிரி வீட்டு முன்பு முச்சந்தி உள்ளது என்றால் சரிதான். ஹாலோ பிளாக் போட்ட ரோடு 10 அடி அகல குறுகிய ரோடு என்றால் சரிதான். என் சகோதரர் கர்ணனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் இல்லை. எதிரிக்கும் என் சகோதரர் கர்ணனுக்கும் சம்பவத்திற்கு முன்பு எந்த வித முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். பிரச்சனை எதனால் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியின் மகள் தண்ணீர் எடுத்துக்கொண்டு வரும்போது என் சகோதரர் கர்ணன் எதிரியின் வீட்டு முன்பாக இருசக்கர வாகனத்தை குறுக்கே நிறுத்தியிருந்ததால் சம்பவம் ஏற்பட்டதாக என் சகோதரர் சொன்னார் என்றால் சரியல்ல. எதிரி எங்கள் மீது புகார் கொடுத்த பின்பு நாங்கள் எதிரி மீது புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். அதற்கு முன்பு என் தம்பியை நாங்கள் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதால் உடனே புகார் கொடுக்கவில்லை . என் தம்பிக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றும் மருத்துவமனைக்கு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் என் சகோதரர்கள் சேர்ந்து எதிரியை அடித்ததால்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.02 15:28:38 +0530

அவர் எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றும் அதற்கு பதிலடி வழக்காக என் சகோதரர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் சகோதரர் கர்ணனை சாதியை சொல்லி திட்டவில்லை, அடிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.02 15:28:43 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

**Spl.SC.No. 14/2023** Dated:. 02.03.2026

( எதிரி ஆஜர். )

**அ.சா.6 பிச்சைப்பாண்டி, த/பெ. கருப்பையா**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வழக்கின் புகார்தாரரான கர்ணன் (அ.சா.1) என் உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். அ.சா.5 கவிதா என் உடன்பிறந்த அக்கா என்றால் சரிதான். எங்கள் குடியிருப்பு மாரந்தை கிராமத்திற்கு கிழக்கே சுமார் 300 மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் குடியிருப்பு பகுதியில் இருந்து எதிரியின் வீட்டு முன்பு என்ன நடக்கிறது என்பதை பார்க்க முடியாது என்றால் சரிதான். எதிரி வீட்டு முன்பு முச்சந்தி உள்ளது என்றால் சரிதான். ஹாலோ பிளாக் போட்ட ரோடு 10 அடி அகல குறுகிய ரோடு என்றால் சரிதான். என் சகோதரர் கர்ணனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் இல்லை. எதிரிக்கும் என் சகோதரர் கர்ணனுக்கும் சம்பவத்திற்கு முன்பு எந்த வித முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். எதிரியின் மகள் தண்ணீர் எடுத்துக்கொண்டு வரும்போது என் சகோதரர் கர்ணன் எதிரியின் வீட்டு முன்பாக இருசக்கர வாகனத்தை குறுக்கே நிறுத்தியிருந்ததால் சம்பவம் ஏற்பட்டதாக என் சகோதரர் சொன்னார் என்றால் சரியல்ல. என் அண்ணன் உரமூடை ஏற்றிக்கொண்டு வந்து எதிரியின் வீட்டு முன்பு உள்ள புரோட்டா கடையில் புரோட்டா வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தை நிறுத்தியபோது எதிரி நிறுத்தக்கூடாது என பேசி அடித்துள்ளார். எதிரியின் மகள் எதிரி வீட்டு வாசல் முன்பு இருசக்கர வாகனத்தை நகற்றி வையுங்கள் என கூறியபோது என் அண்ணன் குடிபோதையில் இருந்ததால் உரமூடையுடன் இருந்த பைக்கை நகற்றும்போது தடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்றால்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.02 15:28:48 +0530

சரியல்ல. என் அண்ணன் கர்ணன் தகவல் சொன்னவுடன் நான் என் அக்கா உட்பட அனைவரும் வந்து எதிரியை அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. எதிரியை அடித்தது சம்பந்தமாக எதிரி இளம்செம்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபிறகுதான் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பதிலடி வழக்காக என் சகோதரர் புகார் கொடுத்தார் என்றும் அந்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் சகோதரர் கர்ணனை சாதியை சொல்லி திட்டவில்லை, அடிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.02 15:28:52 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)